பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 253

வியாழக்கிழமை
06 ஓகஸ்ட் 2026

ஆடி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057



## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுடைய மரபணு மாதிரிகளை பாதுகாப்பது அவசியம்

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஓக. 6
காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவுகளின் மரபணு மாதிரிகளைப்பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. எனவே இது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் வலியுறுத்தினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதுவரை 480க்கும் மேற்பட்ட என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. எனவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவுகளின் »11



## செம்மணி மனிதப்புதைகுழியின் அகழ்வெல்லையை விரிவாக்குக

### சட்டத்தரணிகள் நேற்றுக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 6
அரியாலை செம்மணி மனிதப்புதைகுழியின் அகழ்வெல்லையை மேலும் விரிவாக்க வேண்டும் என்றும், அதற்கான ஆய்வுப் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் நேற்றுச் சுட்டிக்காட்டினார்கள். »11

## 500 இனை நெருங்குகிறது செம்மணி என்புத்தொகுதி!

விரிவு பக்கம்:- 10



## சி.ஐ.டி.யின் விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்!

### சட்டத்தரணிகள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 6
செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக் »11

குட்டிமணி, தங்கத்துரைக்கு

## சிலை அமைக்க தடை நீங்கியது!

யாழ்ப்பாணம், ஓக. 6
வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட அரசியற் கைதிகளான குட்டிமணி மற்றும் தங்கத்துரைக்கு சிலைகள் »11

## செம்மணி என்புத்தொகுதிக்கு கார்பன் பரிசோதனை தேவை

### குற்றப்புலனாய்வுத் துறையினர் விடாப்பிடி

யாழ்ப்பாணம், ஓக. 6
செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு கார்பன் பரிசோதனைகள் இடம்பெற வேண்டும் என்று குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் தமது கோரிக்கையை »11

முன்னாள் அமைச்சர்

## அகிலவிராஜ்க்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஓக. 6
ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி »11

நீதிபதிகளின்

## ஓய்வு வயது நீடிக்கப்பட்டால் இளைஞர் புரட்சி வெடிக்கும்

### ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

விரிவு பக்கம்:- 11

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியத் தலையீடு தேவை!

### கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஓகஸ்ட் 6
இலங்கையில் கடந்த 77 ஆண்டுகளாக நிலவிவரும் இன முரண்பாடு தீர்க்கப்பட வேண்டுமாயின் இந்தியத் தலையீடு தேவை இவ்வாறு இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரியிடம் »11



## வீட்டிலிருந்தோரைத் தாக்கி 10 பவுண் நகை கொள்ளை!

### அராலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 6
அராலியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் குழுவொன்று, வீட்டில் இருந்தவர்களைத் தாக்கிவிட்டு 10 பவுண் நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.
அராலியில் நேற்றுமுன்தினம் இரவு மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. »11

மத்திய மலைநாட்டில்

## தொடர்கிறது பேரிடர் 16,000 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 6
மத்திய மலைநாட்டில் தொடரும் மழையுடனான அசாதாரண கால நிலை காரணமாக 4 ஆயிரத்து 151 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 345 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி உள்ளிட்ட 11 மாவட்டங்களில் கடந்த சில »10

முச்சந்தி முனி
"நாப்பது வருசமா அவை தலையிட்டதாலதான் ஒட்டகம் புகுந்த கூடாரம் மாதிரி நாடு மாறிட்டு கண்டியளோ"

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 05.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4512 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 44 49 60 71 |
| விசேட எழுத்து | T |

| ஹந்தஹான ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 05.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1579 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 35 44 48 53 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 05.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0538 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 4 0 4 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 05.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2618 |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 07 21 23 50 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 05.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6270 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 9 9 4 0 5 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 05.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2300 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 38 56 69 80 |
| விசேட எழுத்து | Y |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 05.08.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0386 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 34 38 |

# புதிய அரசியலமைப்பு உடன் சாத்தியமற்றது

## நீதியமைச்சர் தெரிவிப்பு!

**கொழும்பு, ஓக.6**

**புதிய அரசியலமைப்பு மறுசீரமைப்பு என்பது ஒரு நீண்டகாலப் பொறிமுறையாகும். முழுமையான புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு முன்பதாக, சில மறுசீரமைப்புகளை முன்னெடுப்பது அவசியம் என்று நீதி அமைச்சர், சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் புதிய அரசியலமைப்பு மறுசீரமைப்பைக் கொண்டுவருவது என்பது உடனடி சாத்தியமற்ற, ஒரு நீண்டகாலப் பொறிமுறை சார்ந்த விடயமாகும்.

இருப்பினும், வாக்குறுதி அளித்தபடி புதிய அரசியலமைப்பு மறுசீரமைப்புப் பணிகளை அரசாங்கம் நிச்சயமாக முன்னெடுக்கும்.

முழுமையான புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு முன்பதாக, நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பு மற்றும் சட்ட அமைப்பில் தற்சமயம் மிக அவசியமாகவுள்ள சில மறுசீரமைப்புகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

வழக்குத் தேக்கங்களைக் குறைத்தல் மற்றும் நீதித்துறைச் செயற்பாடுகளை வலுப்படுத்துதல் போன்ற உடனடிச் சீர்திருத் தங்கள் முதற்கட்டமாக முன்னெடுக்கப்படும். நாட்டில் தற்சமயம் மிக அவசியமாகவுள்ள சில முக்கியமான நீதித்துறை மற்றும் சட்ட மறுசீரமைப்புகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் - என்றார். (ச-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 05.08.2026 | புதன்கிழமை | 0978 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| F | 1 5 8 0 1 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.08.2026 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3244 | U | 19 35 59 71 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.08.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 02 03 14 56 | 5405 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 05.08.2026 | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 1074 | 04 10 18 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.08.2026 | புதன்கிழமை | |
| தனுஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 35 41 43 52 | 4956 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 05.08.2026 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 25 | 19 28 38 63 | 2420 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 05.08.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| E | 04 43 72 73 | 3070 |

# சிறைகளில் 72 வீதமானோர் விளக்கமறியல் கைதிகளே!

*தரவுகளில் தகவல்*

கொழும்பு, ஓக.6

நாடளாவிய ரீதியிலுள்ள சிறைச்சாலைகளில் தீவிரமடைந்து வரும் நெரிசலுக்கு மத்தியில், மொத்தக் கைதிகளில் நான்கில் மூன்று பங்கினர் தீர்ப்பு வழங்கப்படாத விளக்கமறியல் கைதிகள் எனத் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

2026 ஓகஸ்ட் முதலாம் திகதி நிலைவரப்படி, நாட்டின் மொத்தச் சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 39,516 ஆகப் பதிவாகியுள்ளது. மொத்தக் கைதிகளில் 28,646 பேர் வழக்கு விசாரணைகளில் உள்ள விளக்கமறியல் கைதிகளாவர். 10,870 பேர் மட்டுமே நீதிமன்றினால் தண்டனை அளிக்கப்பட்ட கைதிகளாவர். ஒட்டுமொத்தமாகச் சிறைகளில் 37,523 ஆண் கைதிகளும் 1,993 பெண் கைதிகளும் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# சொகுசுப் பேருந்துக்கு விசமிகளால் தீவைப்பு!

கொழும்பு, ஓக.6

கடுவலை பேருந்து நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சொகுசுப் பேருந்துக்கு, நேற்று அதிகாலை, அடையாளம் தெரியாத இருவர், தீ வைத்ததில் பேருந்து முழுமையாக தீக்கிரையாகியுள்ளது. அதிவேக நெடுஞ்சாலை ஊடாக கடுவலை மாத்தறை வீதியூடாக சேவையில் ஈடுபடும் பேருந்துக்கே தீ வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பேருந்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேலும் இரு பேருந்துகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

பேருந்து எரிக்கப்பட்ட போது, அதன் சாரதியும், நடத்துநரும் அதற்குள் உறங்கிக் கொண்டிருந்தனர். எனினும் இருவரும் எவ்வித காயங்களுமின்றி அதிர்ஷ்டவசமாகத் தப்பியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

மஹர சிறைச்சாலையில்

# 991 பேர் இருக்குமிடத்தில் 4,447 கைதிகள் அடைப்பு

கொழும்பு, ஓக.6

991 கைதிகளை மட்டுமே அடைத்து வைக்க அனுமதி கொண்ட மஹர சிறைச்சாலையில், தற்போது 4,447 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளதே இந்த மோதலுக்குக் காரணம் எனச் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக்க பெரேரா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைதிகள் தூங்குவதற்குப் போதுமான இடமின்றியும், அடிப்படை மலசலகூட வசதிகளுமின்றியும் மனிதாபிமானமற்ற சூழலில் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இடநெருக்கடியும் மன அழுத்தமும் முற்றி, சிறைகளுக்குள் கைதிகளுக்கிடையேயான மோதல்களாகவும் வன்முறைகளாகவும் வெடிக்கின்றன. தொற்று நோய்கள் மற்றும் நோய்கள் மிக வேகமாகப் பரவும் அபாயம் காணப்படுகிறது. சிறைகளில் உள்ள கைதிகளில் 72%க்கும் அதிகமானோர் வழக்கு விசாரணை முடியாத விளக்கமறியல் கைதிகள் என்பதே நெரிசலுக்கு முதன்மைக் காரணமாகும். எனவே சிறைச்சாலைகளில் மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைகள் வெடிப்பதைத் தவிர்க்க, வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்தி விளக்கமறியல் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே நிரந்தரத் தீர்வாக அமையும் - என்றார். (ச-இ)

# ஜூலையில் 25,622 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்கு வெளியேற்றம்

கொழும்பு, ஓக.6

இந்த ஆண்டின் ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், ஜூலை மாதத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை 4.84 சதவீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2026 ஜூலை மாதத்தில் 25,622 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காகச் சென்றுள்ளதுடன், **இது இந்த ஆண்டில் ஒரே மாதத்தில் பதிவான அதிகபட்ச எண்ணிக்கையாகக் கருதப்படுகிறது.**

ஜூன் மாதத்தில் 24,440 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தனர்.



இஸ்ரேல், தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் அரசாங்கம் எட்டியுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் காரணமாக அந்த நாடுகளில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் இலங்கையர்களிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டின் ஜனவரி முதல் ஜூன் வரையிலான முதல் 6 மாத காலத்தில், புலம்பெயர் தொழிலாளர்களால் 4.6 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு வருவாய் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் 200 மில். டொலர் பெற அனுமதி!

**கொழும்பு, மே 6**

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களின் கீழ், 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெறுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

இந்தக் கடனைப் பெறுவதற்கான கடன் ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு, 2026 ஜூன் 15ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் வர்த்தகம், முதலீடு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் முதல் உபத்திட்டம் தொடர்பான கடன் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சட்டபூர்வ ஒப்புதல்களும் பெறப்பட்டுள்ளன. அதையடுத்து அரச கடன் முகாமைத்துவ அலுவலகம் முன்வைத்துள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெறுவதற்கான யோசனைக்கு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. (எ-இ)

## நெடுஞ்சாலை வலையமைப்பை விரிவாக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக.6

2030ஆம் ஆண்டுக்குள் நான்கு முக்கியமான திட்டங்களை நிறைவுசெய்வதன் மூலம் இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்பு மேலும் 132 கிலோமீற்றர் வரை விரிவுபடுத்தப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தத் திட்டங்களின் சிறப்பம்சமாக, அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திப் பணிகளுக்கு முழுமையாக உள்நாட்டு அரச நிதி பயன்படுத்தப்படவுள்ளது என்றும், இது இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலைத்திட்ட வரலாற்றில் முதல் முறையாகும் என்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## விவசாயிகளுக்கான உரமானியப் பதிவு

சாவகச்சேரி, ஓக. 6

தென்மராட்சித் தெற்கு மறவன்புலவு மற்றும் தனன்களப்பு கமக்கார அமைப்புகளின் பிரிவுகளுக்குட்பட்ட காலபோக நெற்செய்கை விவசாயிகளுக்கான உர மானியப் பதிவுகள் நாளை வெள்ளிக்கிழமையும், எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், சாவகச்சேரி டச்சு வீதி செருக்கல் பிள்ளையார் கோவில் முன்றலிலுள்ள சாவகச்சேரி கிராம செயலக மண்டபத்தில் இடம்பெறும். எனவே கமக்கார அமைப்புகளைச் சேர்ந்த நெற்செய்கையாளர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு மறவன்புலவு கமக்கார அமைப்பின் தலைவர் சி. திருஞானசம்பந்தர் கேட்டுள்ளார். (க-9)



## கொத்மலை நீர்த்தேக்க வான்கதவுகள் திறப்பு

நுவரெலியா, ஓக. 6

நுவரெலியா மாவட்டத்தில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் பலத்த மழையால் அந்த நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை தன்னிச்சையாகத் திறந்துள்ளது என்று அதற்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

ஒவ்வொரு நீர் வெளியேற்றும் கதவிலிருந்தும் வினாடிக்கு 30 கனமீற்றர் நீர் கொத்மலை ஆற்றுக்கு வெளியேற்றப்படுகிறது எனவும் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை தொடருமானால், எஞ்சிய வான் கதவுகளும் தன்னிச்சையாகத் திறக்கப்படும் என்பதால், நீர்த்தேக்கத்தின் கீழ்ப் பகுதியில் உள்ள கொத்மலை ஆற்றின் இரு கரைகளிலும் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

## சஷீந்திரவின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே 6

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் ராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச உட்பட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரணைக்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி அழைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு அழைக்கப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சஷீந்திர ராஜபக்ச உள்ளிட்ட பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர். (எ-இ)






## ஒரு பாதையில..!

ஆடு நிக்கிற இடத்தில ஆடுதான் நிக்கோணும். ஆட்டுக் கொட்டிலுக்க கொண்டந்து மாட்டையும் சேர்த்துக் கட்டினால், ஆடும் நிக்கேலாது மாடும் நிக்கேலாது. ஆனால் இந்தச் சின்ன விசயம் கூட எங்கட காக்கி உடுப்புக்காரருக்குத் தெரியிறேலை. எல்லாத்தையும் ஒண்டடி மண்டடியாச் செய்து, குழப்பியடிக்கிறது அவைக்கு வாடிக்கையாப் போட்டுது. இப்ப பள்ளிக்கூடங்களின்ர நடைபவனிக்காலம். கன பள்ளிக்கூடங்கள் தங்கட நூற்றாண்டு, நூற்றி ஐம்பாதவது ஆண்டு நிறைவுக்கும், இன்னும் சில பள்ளிக்கூடங்கள் வித்தியாலயமா இருந்து கல்லூரியா மாறினதைக் கொண்டாடவும் இப்பிடி நடைபவனியளை வைக்கினம். இந்த நடைபவனியளில இப்ப அந்தப் பள்ளிக்கூடங்களில படிக்கிறவை மட்டும் கலந்துகொள்ளுறேலை. கூடுதலா முந்தி அந்தப் பள்ளிக்கூடத்தில படிச்சவைதான் இதில கடும் ஆர்வத்தோட வந்து நடப்பினம். அவைக்குத் திரும்ப ஒருக்கா பள்ளிக்கூடம் போன நிறைவு அதில வரும். இந்த அனுபவம் அவ்வளவு லேசா எல்லாருக்கும் கிடைக்காது தானே. அதால இந்தச் சான்ஸூக்காக ஏங்கிக் கொண்டிருக்கிற பழைய மாணவர்மார் வெளிநாட்டில இருந்து கூட, இதுக்காக மினக்கெட்டு வந்து நடைபவனியளைச் சிறப்பாக்குகினம்.

இப்பிடி கிட்டடியில ஒரு பள்ளிக்கூடத்தின்ர நூற்றம்பதாவது ஆண்டுக் கொண்டாட்டத்துக்கு ஒரு நடைபவனி நடந்தது. இதுக்கு முதல் அந்தப் பள்ளிக்கூடத்தில சில நிர்வாகச் சிக்கல்கள், பிக்கல் பிடுங்கல்கள் எண்டு இந்தக் கொண்டாட்டம் நடக்குமோ இல்லையோ எண்டது கூட தெரியாத தொங்குபறி நிலைதான் இருந்தது. எண்டாலும் நடைபவனி நடக்க நாலைஞ்சு நாளுக்கு முன்னம் தான் நிலைமை கொஞ்சம் சீருக்கு வந்தது. இப்பிடியொரு பதகளிப்பான நிலைமையில உந்த நடைபவனியில கனபேர் கலந்துகொள்ளாயினம் எண்டுதான் எல்லாரும் நினைச்சவை. ஆனாலும் நாலுபேர் நடந்தாலும் அதுக்குக் கட்டாயம் உரிய அனுமதியள் எடுக்காமல் ஒண்டும் செய்யேலாதே. அதால அந்த ஏரியாவுக்குப் பொறுப்பான பொலிஸ் ஸ்ரேசனிலயும் நடைபவனிக்கு அனுமதி எடுத்தவை. எத்தினை மணிக்கு நடைபவனி தொடங்கும், எத்தினை மணிக்கு முடியும், எந்தெந்த வழியால போகும், கிட்டத்தட்ட எவ்வளவு பேர் வருவினம், ஆர் இதுக்குப் பொறுப்பா நிப்பினம் எண்டெல்லாம் நிறைய விவரங்களைக் குடுத்துத்தான் உந்த அனுமதியை எடுத்தவை.

நினைச்சதுக்கு மாறா பதகளிப்பையும் தாண்டிப் பள்ளிக்கூடத்தில கொண்ட பற்றால கனபேர் நடைபவனிக்கு வர அந்த ஏரியாவே திருவிழா மாதிரி மாறிட்டுது. கிட்டத்தட்ட 8 கிலோமீற்றர் தூரம் நடைபவனி. சொன்ன நேரத்துக்குத் தொடங்கி, சொன்ன நேரத்துக்கு முடிஞ்சுது. ஆனால் முடிவுக் கட்டத்துக்கு கிட்ட வரேக்க ஒரு சிக்கல். ஆடிப்பாடி, மேளமடிச்சு, கோசங்கள் போட்டு எழுச்சியா வந்துகொண்டிருந்த நடைபவனிக்காரரை ஓரமா ஒதுங்கி நிக்கச் சொல்லி சிக்னல் காட்டிக்கொண்டு பொலிஸ்காரர் மோட்டர் பைக்கில போச்சினம். அப்பிடியே அவைக்குப் பின்னால அம்புலன்ஸ், கார், மோட்டர்சைக்கிள் எண்டு எல்லாம் மின்னல் வேகத்தில அந்த றோட்டின்ர அரைவாசிப் பக்கத்தைப் பிடிச்சுக் கொண்டு வாகனங்கள் சீறிக்கொண்டு வர, பின்னால ஒரு ஏழெட்டுப் பேர் சைக்கிள் றேஸ் வந்து கொண்டிருந்தினம். அந்தநேரத்தில நடந்துகொண்டிருந்த பள்ளிக்கூடப் பிள்ளையளும், பழையமாணவரும் பதறியடிச்சுக்கொண்டு ஒரு கரையா ஒதுங்கிட்டினம். எண்டாலும் நடைபவனியில வந்த ஊர்தியள், மாடு வண்டில், மேளங்கள் பூட்டின வாகனம் எல்லாம் உடன கரையில ஒதுங்கேலாமல் நடுறோட்டில தான் நிண்டதுகள். அதால நடைபவனிக்காரரை உரஞ்சிக்கொண்டும், ஊடறுத்துக் கொண்டும் தான் சைக்கிள் ரேஸ்காரர் போக வேண்டி வந்தது. அதுக்குப் பிறகுதான் தெரிஞ்சுது, நடைபவனி வாற அதே ரூட்டில, அதேநேரத்தில பொலிஸ்காரர் இன்னொரு வாசிகசாலை சைக்கிளோட்டப் போட்டி நடத்துறதுக்கும் அனுமதி குடுத்திருக்கினம் எண்ட விசயம். கொஞ்சமெண்டால், நடைபவனிக்குள்ள சைக்கிள்கள் வந்து இடிபட்டிருக்கும். நல்ல வேளையா ஒருத்தருக்கும் ஒண்டும் நடக்கேலை. இப்பிடி ஒரு பெரிய நடைபவனி நடக்கிற நேரத்தில, ஒரே பாதையில ரண்டு நிகழ்வுக்கு அனுமதி குடுத்த பொலிஸ்காரரின்ர மூளை எங்க போச்செண்டு ஆருக்குமே தெரியேலை. இல்லாட்டி இப்பிடி ரண்டு தரப்பும் இடிபட்டு, அசம்பாவிதம் வரட்டும் எண்ட எண்ணத்திலதான் அவையள் இப்பிடி அனுமதி குடுத்திச்சினமோ எண்டது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் வெளிப்படும் பயங்கரவாத வன்முகம்

## அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவிப்பு!!

**கொழும்பு, ஓக.6**

**மாற்றம் எனும் தொனியோடு ஆட்சிபீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் காலத்திலும், அரச பயங்கரவாத இயந்திரம் தமிழர்களுக்கு எதிரான தனது வன்முகத்தையே காட்டி நிற்கின்றது என கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தெற்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை ஒழுங்கு செய்த அருட்சகோதரி மற்றும் அருட்தந்தை ஆகியோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது அந்த நிகழ்வில் வளவாளராகக் கலந்துகொண்ட 'பன்னாட்டு குற்றங்கள்' நூலின் ஆசிரியர் சிரி ஞானேஸ்வரனையும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அழைத்துள்ளனர்.

நிகழ்வு முடிந்து ஒரு வருடம் கடந்த நிலையிலும் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகள், நினைவேந்தல் சுதந்திரத்துக்கு எதிராகவும் அமைப்புகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவுமே தென்படுகின்றது. வடக்கைப் போலவே தெற்கிலும் மக்கள் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு எதிரான நீதிக்காகக் குரலெழுப்புவார்களோ என்றும், பேரினவாத அரசின் கொடூர முகம் வெளிப்பட்டு விடுமோ என்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அச்சமடைகின்றது. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தொடர்ந்து விசாரணை என அழைப்பது அரச பயங்கரவாத இயந்திரம் தமிழர்களுக்கு எதிராக தேசிய மக்கள் சக்தியின் காலத்திலும் தமது வன்முகத்தைக் காட்டி நிற்கிறது - என்றார். (ச-இ)



6ம் ஆண்டு என்றும் நீங்காத நினைவுகள்

மண்ணில் 09 . 01 . 1954

விண்ணில் 13 . 07 . 2020

**அமரர் சிவபாதம் தனலட்சுமி**

திதி: அட்டமி

அம்மா...
உங்கள் முகம் மறைந்தாலும்
உங்கள் பாசம் மறையவில்லை...
உங்கள் குரல் ஒலிக்காவிட்டாலும்
உங்கள் வார்த்தைகள் எங்கள்
காதுகளில் இன்னும் ஒலிக்கின்றன...
நீங்கள் நடந்த பாதையில் நாங்கள் இன்று நடக்கிறோம்...
நீங்கள் கற்றுத் தந்த அன்பை நாங்கள்
வாழ்வில் விதைக்கிறோம்...
நீங்கள் விண்ணில் ஒரு நட்சத்திரம்... நாங்கள் பூமியில்
உங்களைத் தேடும் பிள்ளைகள்...
அன்பு என்றால் அம்மா...
அரவணைப்பு என்றால் அம்மா...
தியாகம் என்றால் அம்மா...
அந்த அன்பின் உருவம் இன்று எங்களோடு
இல்லையென்றாலும், அவர்களின் ஆசீர்வாதம் எங்கள்
வாழ்வில் என்றும் ஒளிவிளக்காக இருக்கும்.
அவர்களின் ஆத்மா இறைவனின் திருவடியில்
நித்திய அமைதியை அடைய பிரார்த்திக்கின்றோம்.
"பிரிவு என்பது உடலுக்கு மட்டுமே...
உண்மையான அன்பிற்கு பிரிவு என்பதே இல்லை."

என்றும் நீங்காத நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
தகவல்- குடும்பத்தினர்

(CR/47882) J-1

## மாணவர்களுக்கான பரிசு அநுராதபுரத்தில் சர்ச்சை

அநுராதபுரம், ஓக.6

அநுராதபுரம் மாவட்டத்தில் பாடசாலையொன்றில் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு, 'அரை நிர்வாண பெண் நடனக் கலைஞரின்' படம் பொறிக்கப்பட்ட நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டதாகப் பெற்றோர், பொதுமக்கள் மத்தியில் சர்ச்சை எழுந்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரம் பாடசாலையொன்றில் நடந்த நிகழ்வில் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதியமைச்சர் கமகேதர திசாநாயக்க ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். இதன்போது பாடசாலைகளின் மாணவர்கள் கலந்துகொண்ட போட்டிகளின் இறுதியில், வெற்றிபெற்ற சிறுவர்களுக்குக் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. அதில் 'அரை நிர்வாண பெண் நடனக் கலைஞரின்' படம் பொறிக்கப்பட்ட பரிசு மாணவர் களுக்கு வழங்கப்பட்டமை கவலையளிப்பதாக பெற்றோர் சுட்டிக்காட்டினர். எனினும் இசைக்கருவியை மீட்டும் பெண் உருவம் பொறிக்கப்பட்ட இந்தப் பரிசு சிற்பம்/படம் கலை மற்றும் இசைப் பாடம் சார்ந்த மரபுரீதியான கலைவடிவம் என்பதன் யதார்த்தத்தை பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும் என அநுராதபுரம் மாவட்ட பாலமண்டலத் தின் பிரதம செயலாளர் குண்வத்துவே குசலதம்ம தேரர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## மணமகள் தேவை

1. சாவகச்சேரி - சிறுப்பிட்டி , இந்து, கௌரவகுலம், 1979, உத்தராடம், BSc Engineer, UK Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. - 25888
2. நயினாதீவு - சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம், 1994, புனர்பூசம், BSc, in Software Development, Canada மணமகனுக்கு மணமகள் தேவை. - 58357
3. உடுப்பிட்டி - நீர்வேலி, இந்து, 1991, பரணி A/L, Germany மணமகனுக்கு மணமகள் தேவை. - 58017
4. நல்லூர், இந்து, 1991, திருவாதிரை, BSc, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. -57594
5. திருநெல்வேலி - நீர்வேலி, இந்து, 1980, சித்திரை Quantity Surveyor மணமகனுக்கு மணமகள் தேவை. -57113
6. Jaffna Town, இந்து,1979, புனர்பூசம் , Business Managment, UK Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. -26347
7. நீர்வேலி - கைதடி, இந்து, 1987, அத்தம், A/L, கௌரவகுலம், France, மணமகனுக்கு மணமகள் தேவை. -25868
8. திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம் (V), 1982, உத்தராடம்.Diploma Canada மணமகனுக்கு மணமகள் தேவை. -25820
9. புலோலி, இந்து, கௌரவகுலம் (V), 1981, கார்த்திகை, Masters Degree, UK Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. - 26351
10. வேலணை, இந்து, கௌரவகுலம் (V), 1987, ஆயிலியம், IT Degree UK Citizen, Software Engineer Vegetarian, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. - 58553

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce மணப்பெண்களும், மணமகன்களும் உண்டு.

S.Sharma J.P. Call: 077 539 3728
www.thaalee.com whatsapp: 077 992 1494

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை - புத்தூர்
## பொதுமக்களுக்கான அறிவித்தல்

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைக்குட்பட்ட கீழ்வரும் இடங்களில் தொலைத்தொடர்பு கம்பங்கள் (Lamp Pole -30M) அமைப்பதற்கான அனுமதிக்கு கோரிக்கை சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்படி கோரிக்கையினை பரிசீலிப்பதற்கு ஏதுவாக அச்சுற்றாடலில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களிடமிருந்து அபிப்பிராயங்கள் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், மேற்படி தொலைத்தொடர்பு கம்பங்கள் அமைப்பது தொடர்பான பொது மக்களது அபிப்பிராயங்களை "தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்" எனும் முகவரிக்கு 18.08.2026 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் சமர்ப்பிக்கலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

| இல | அமைவிடம் | கிராமத்தின் பெயர் | கிராம சேவையாளர் பிரிவு |
|---|---|---|---|
| தொலைத்தொடர்புக் கம்பம் - 01 | வாதரவத்தை விக்னேஸ்வரா சனசமூக நிலைய வளாகம், வாதரவத்தை | வாதரவத்தை | J/280 |
| தொலைத்தொடர்புக் கம்பம் - 02 | இ.சுதாகரன், சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு | ஆவரங்கால் மேற்கு | J/277 |
| தொலைத்தொடர்புக் கம்பம் - 03 | பா.சிறிகெங்கபாலா, பாலாமில், உரும்பிராய் | உரும்பிராய் வடக்கு | J/266 |

தியாகராஜா நிரோஷ்,
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர். 06.08.2026.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# அரசை விடவும் அதிகாரம்!

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்கும் சட்டமூலம் தொடர்பாக மகாநாயக்க தேரர்களிடம் அரசு தரப்பில் அமைச்சர்கள் நளிந்த ஜெயதிஸ்ஸவும் ஹர்ஷண நாணயக்காரவும் ஓடோடிச் சென்று விளக்க மளிப்பதும், அதே விவகாரத்தில் அரசாங்கத்துக்கு எதிரான அரசியலை முடுக்கிவிட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு எதிரணியினர் மகாநாயக்கர் களின் பாதங்களை நோக்கிப் படையெடுப்பதும் இலங்கையின் எந்தவொரு விடயத்திலும், அரசாங்கத்தை விடவும் அதிகாரம் மிக்கவர்கள் யாரென்பதை அப்பட்டமாக்கியுள்ளது. ஜனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றமும், சட்டங்களை இயற்றும் அமைச்சரவையும் இருந்தபோதிலும், நாட்டின் மிக முக்கியமான கொள்கை முடிவுகளைத் தீர்மானிக்கும் உச்சகட்ட 'நிழல் அதிகாரமையமாக' பௌத்த மதத்தின் மகாநாயக்க தேரர்களே இன்னமும் வீற்றிருக்கிறார்கள் என்பதை இந்த இரு நிகழ்வுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி வெளிச்சம்போட்டுக் காட்டி யுள்ளன.

நாட்டின் நீதித்துறைச் சீர்திருத்தம், நிர்வாக மாற்றங் கள் முதல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அத்தனை சட்டமூலங்களுக்கும் மதகுருமார்களின் ஆசிர்வாதத்தை வாங்குவது என்பது தென்னிலங்கை அரசியல்வாதி களுக்குத் தங்களின் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள் வதற்கான தவிர்க்கமுடியாத சடங்காகவே மாறிவிட்டது. 'மாற்றம் கொண்டுவருவோம்' என்று மேடைகளில் முழங்கி ஆட்சிப் பீடமேறிய இடதுசாரித்துவக் கொள்கையில் பிறந்த திசைகாட்டி அரசாங்கமும், அதே பழைய பௌத்த மேலாதிக்கச் சரணாகதி அரசியலுக் குள்ளேயே சுழன்று கொண்டிருப்பது பேரதிர்ச் சியளிக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை விடவும், எவ்வித அரசியலமைப்புப் பொறுப்பும் இல்லாத ஆன்மிகத் தலைவர்கள் நாட்டின் கொள்கை முடிவுகளைத் தீர்மானிக்கும் இந்த அநீதியான முறைமை, ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக நாட்டுக்குப் பொருத்தமானதுதானா என்ற கேள்வியை எழுப்புகிறது.

இலங்கையின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், எமது நாடு இன்று சந்தித்து நிற்கும் இனப் பிரச்சினை, சிறுபான்மையினரின் உரிமை மறுப்புகள் மற்றும் பொருளாதாரச் வீழ்ச்சி உள்ளிட்ட அத்தனை சாபக்கேடுகளுக்கும் பின்னணியில் இந்த மகாநாயக்கர் களின் 'மகாவம்ச மனோநிலையே' முதன்மைச் காரணியாக இருந்துள்ளது. இலங்கைத்தீவு முழுவதையும் ஒற்றைப் பௌத்த மேலாதிக்க நிலப்பரப்பாக மட்டுமே பார்க்கும் இந்தக் குறுகிய மதப் பார்வையின் விளை வாலேயே, பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் முதல் 13ஆவது திருத்தச் சட்டம் வரையிலான தமிழ் மக்களின் நியாயமான சுயநிர்ணய மற்றும் அதிகாரப் பகிர்வு முயற்சிகளும் முடங்கிப் போயின. சிறுபான்மை யினரைச் சம உரிமையுள்ள குடிமக்களாகப் பார்க்க மறுக்கும் இத்தகைய பௌத்த தீவிரவாத மனோநிலை தான், நாட்டைத் தொடர் இனமுறுகல்களுக்கும், பேரழிவுகளுக்கும் தள்ளியதுடன், தேசிய நலன் சார்ந்த பலமுக்கியமான சீர்திருத்தங்களையும் முடக்கிப் போட்டுள்ளது.

அரசியலமைப்புக்கு அப்பால் இயங்கும் இந்த 'நிழல் அதிகாரமையங்களின்' தயவில் ஆட்சி நடத்துவதையும், அவர்களின் அரசியல் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்பத் தேசியக் கொள்கைகளை வகுப்பதையும் தென்னிலங்கையின் அனைத்து அரசியல் தரப்புகளும் உடனடி நிறுத்தியாக வேண்டும். மகாநாயக்கர்களின் கதவுகளைத் தட்டித் தங்களின் குறுகிய அரசியல் இலாபங்களைத் தேடும் இந்த அநாகரிகக் கலாசாரம் முடிவுக்கு வராதவரை, இலங்கையில் சட்டத்தின் ஆட்சியோ, மதச்சார்பற்ற ஜனநாயகமோ அல்லது சிறுபான்மையினருக்கான நீதியோ ஒருபோதும் மலரப் போவதில்லை. அரசாங்கமும் எதிரணியும் மத மேலாதிக்கத்தின் நிழலிலிருந்து வெளியேறி, அரசியலமைப்புக்கும் நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்குமான ஜனநாயகப் பொறுப்புக்கூறலுக்கும் உண்மையாகச் செயற்பட முன்வரவேண்டும்!






## பொய்யாமொழி

**நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை**

**பொருள்:** ஒருவன் பயனில்லாத பொருள்களைப் பற்றி விரிவாகச் சொல்லும் சொற்கள், அவன் அறம் இல்லாதவன் என்பதை அறிவிக்கும்.




# மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் 10 ஆண்டுகளில் 9,000 பேர் பலி!



அமைச்சர் பிமல் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.6**
**இலங்கையில் ஏற்படும் வீதி விபத்து மரணங்களில் மோட் டார் சைக்கிள் ஓட்டுநர்களே அதிகளவில் பலியாகி வருகின் றனர் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க கவலை வெளியிட்டுள்ளார்.**

நாட்டின் வீதிப் பாதுகாப்பு மற்றும் விபத்துத் தரவுகள் குறித்துக் கருத் துத் தெரிவிக்கும்போதே அவர் இந்தத் தகவலைச் சுட்டிக்காட்டியுள் ளார். அவர் மேலும் தெரிவிக் கையில்,
இலங்கையில் இடம்பெறும் வீதி விபத்துகள் காரணமாக ஆண்டு தோறும் சராசரியாகச் சுமார் 2,500 பேர் உயிரிழக்கின்றனர். கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் மோட்டார் சைக்கிள் விபத்துகளி னால் 9,000 இலங்கைப் பிரஜை கள் தங்கள் உயிர்களை இழந்துள் ளனர்.
நாட்டின் வீதி விபத்து மரணங் களைக் குறைக்க வேண்டுமாயின், மோட்டார் சைக்கிள்களின் பாது காப்பு மற்றும் அவர்களின் பயண முறைகளில் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவது அவசியமாகும் - என்றார். (ச-இ)

## சிசுசெரிய பேருந்தின் சாரதி கைது

மொனராகலையிலிருந்து பதுளைக்குப் பயணித்த 'சிசு செரிய' தனியார் பேருந்தின் சாரதி, மதுபோதையிலி ருந்த நிலையில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
குறித்த பேருந்தை ஆபத் தான முறையில் சாரதி செலுத்துவதாக, பதுளை பொலிஸ் தலைமையகத் துக்குத் தகவல் வழங்கப்பட் டுள்ளது. இதனையடுத்து பதுளை போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள் உடனடி யாக சம்பவ இடத்துக்குச் சென்றனர். சம்பவத்தின் போது பேருந்தில் 4 பாட சாலைகளைச் சேர்ந்த 30 மாணவர்கள் மற்றும் ஆசிரி யர்கள் உள்ளிட்ட 40 பேர் பயணம் செய்துள்ளனர். சாரதி கைதுசெய்யப்பட்டுள்ள துடன், பேருந்தில் பயணித் தவர்கள் மாற்று வாகனங்க ளில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித் தனர். (க-இ)

## பேருந்து மோதி சிறுவன் சாவு

கொழும்பு,ஓக.6
மோட்டார் சைக்கிள் பேருந் துடன் மோதி விபத்துக்குள் ளானதில் 17 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள் ளார். இந்த விபத்து குரு ணாகல் மாவத்தகமப் பகுதி யில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
அஹஸ்யானபிட்டிய நோக் கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், எதிர்த்திசையில் வந்த பேருந்துடன் மோதி விபத்து நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற சிறு வனே விபத்தில் உயிரிழந் துள்ளார். மோட்டார் சைக் கிளின் பின்புறம் அமர்ந்து பயணித்த நபரும் விபத் தில் காயமடைந்து மருத்து வமனையில் சேர்க்கப்பட் டுள்ளார். (க-இ)

## வீட்டின் மீது கைக்குண்டுதாக்குதல்

கொழும்பு,ஓக.6
வீடொன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் இரத்மலானை ஞானேந்திர வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. வீசப்பட்ட இரண்டு கைக்குண்டுகளில் ஒன்று வெடித்துச் சிதறியுள்ளது. எனினும் எவருக்கும் காயங்களோ அல்லது உயிரிழப்போ ஏற்பட வில்லை. மேலும் வெடிக்காமல் இருந்த இரண் டாவது கைக்குண்டைப் பொலிஸார் மீட்டுள் ளனர். (க-இ)

## வாகனங்களுக்கு ஆசனப்பட்டி; பொருத்த காலஅவகாசம் நீடிப்பு

அதிவேக வீதிகளில் பயணிக்கும் வாக னங்களுக்கு ஆசனப்பட்டிப் பொருத் துவதற்கு, வாகன உற்பத்தியாளர்க ளுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைக் காலம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகனச் சட்டத்துக்கு அமைவாக, அதிவேக வீதி களில் வாகனங்களிலும் பயணிக்கும் பயணிகளுக்கு ஆசனப்பட்டி அணி வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதற் கமைவாக ஆசனப்பட்டிப் பொருத்து வதற்காக உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைக்காலம் நிறை வடைந்துள்ள நிலையில், எதிர்வரும் செப்ரெம்பர் 19 வரை மேலும் சலுகைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. (க-இ)

நாளை
வெள்ளிக்கிழமை-ஆடி 22
07.08.2026
சுபநேரம் : 06.04 – 07.34
ராகுகாலம் : 10.34 – 12.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு தென்னை முக்கோண வலய பயனாளிகளுக்கு மானியம் வழங்கல்

முல்லைத்தீவு, ஓக.6


வடக்கு தென்னை முக்கோண வலய பயனாளிகளுக்கு மானியம் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, முள்ளியவளையில் அமைந்துள்ள ஆச்சி திருமண மண்டப வளாகத்தில் இடம்பெறும். பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தலைமையில் நடைபெறும் நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதிப் மற்றும் கூட்டுறவு அபிவிருத்திப் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வில் தென்னை பற்றிய தொழில்நுட்பச் செயல்முறை விளக்கங்கள், கைத்தொழில் செயல்முறை விளக்கங்கள் தென்னை சார்ந்த அரச நிறுவனங்களால் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## 103 ஆவது தடவையாக அமைக்கப்படும் பந்தல்

யாழ்ப்பாணம், ஓக.6

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, ஆலய முன்வாயிலில் அமைக்கப்படும் பாரம்பரியப் பந்தல் இந்த வருடத்துடன் 103 ஆவது தடவையாக அமைக்கப்படுகின்றது.

திருவிழாவை முன்னிட்டு ஆலயத்துக்கு முன்பாகச் செல்லும் பருத்தித்துறை வீதியில், சிவகுரு ஆதீனத்துக்குச் சமீபமாக நல்லைக் கந்தன் தண்ணீர்ப் பந்தல் எனும் பெயரில் பாரம்பரிய முறைப்படி பிரமாண்டமான அலங்காரப் பந்தல் தற்போது துரித கதியில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தத் தண்ணீர்ப் பந்தல் இந்த வருடம் 103ஆவது தடவையாக அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-66)



# மன்னாரில் தொடரும் மின்வெட்டு; பரீட்சை மாணவர்கள் அந்தரிப்பு

மன்னார், ஓக.6

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக இரவு, பகல் பாராது தொடர்ச்சியாகவும் அடிக்கடி மின் சாரத்தடை ஏற்பட்டு வருவதனால், மின் நுகர்வோரும் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எதிர்வரும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள், இந்தத் தொடர் மின்வெட்டுக் காரணமாக இரவில் படிக்க முடியாமல் பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

எவ்வித முன்னறிவிப்புமின்றித் திடீர் திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டு மீண்டும் வருவதால், வீடுகளில் உள்ள தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி போன்ற பெறுமதிமிக்க மின் உபகரணங்கள் சேதமடையும் நிலை யேற்படுகின்றது. இதுகுறித்து மன்னார் இலங்கை மின்சார சபை அதிகாரிகளிடமோ அல்லது வடமாகாணத்துக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளிடமோ கேட்ட போது, அவர்கள் உரிய பதிலையோ அல்லது விளக்கத்தையோ வழங்குவதில்லை. எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு, அடிக்கடி ஏற்படும் மின்சாரத் தடையை நிவர்த்தி செய்து சீரான மின் விநியோகத்தை உறுதிப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-56)



## பரலோக அன்னைக்கு பெருவிழா

நாவாய்கள் அசைந்தாடும்
அலை வந்து கரை தழுவி
முத்தமிட்டு மீளும்
நாவாய் கரையோரப் பதியினிலே
அழகொளியாய் வீற்றிருந்து
அருள் புரிந்து நிற்பாள்
பரலோக அன்னை

அன்னையே அருட்பெரும் ஜோதியே
உன் நாமம் போற்றிப் புகழும்
இந்நாள் திருநாள் அன்றோ
இகவாழ்வின் இன்னவினை நீக்கி
ஈழத்தமிழர்களின் வாழ்வில்
ஒளியினை ஏற்றுவாய்

ஆவணி பதினைந்தில்
பெருவிழா நடக்கும்
பரலோக அன்னையின்
திருக்கோலம் ஊர்வலம் போகும்
தேரேறும் திருத்தாயின்
திருப்பார்வை திசையெங்கும் படரும்
ஊரெங்கும் அருள் வெள்ளம்
கரை புரண்டோடும்

எழிற்கோலம் காட்டுகின்ற
திருத்தாயின் திருக்கோயில் பாரீர்
ஏழிசை பாடலிசை
திசையெங்கும் கேளீர்
அலைகடலும்அருட்கடலும்
சங்கமிக்கும் நேரம்

அடைக்கலமே அடைக்கலமே தாயே
எட்டுத்திக்கும் கேட்கும்
வரம்வேண்டி நிற்கும் பக்தர்களை
மெய்சிலிர்க்க வைக்கும்

டானியல் சௌந்திரன்

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாய் மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைக்காக செலவு செய்ய நேரிடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது இழுபறியாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.


**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக் கூடும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# சர்வதேசப் பாராட்டுப் பெற்ற நாடகம் யாழில் மேடையேற்றம்



யாழ்ப்பாணம், ஓக.6

ஜெர்மனி உட்பட பல சர்வதேச மேடைகளில் அரங்கு நிறைந்த பார்வையாளர்களின் வரவேற்பையும் பாராட்டுகளையும் பெற்ற ஸ்ரேஜஸ் நாடகக் குழுவின் முன்னணிப் படைப்பான 'Dear Children, Sincerely... இலங்கையின் ஏழு தசாப்தங்கள்' நாடகம் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் மேடையேறவுள்ளது. இந்த மேடையேற்றம் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் உள்நாட்டுப் போர் முடிவடையும் வரையிலான 70 ஆண்டு கால வரலாற்றை, விறுவிறுப்பான 7 காட்சிகள் ஊடாக இந்த நாடகம் சித்திரிக்கிறது. 1930களில் பிறந்த தலை முறையினரின் நேரடி நினைவுகள், மனப்பதிவுகள் மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, விரிவான வரலாற்று ஆராய்ச்சியின் மூலம் இது உருவாக்கப்பட்டுள்ளது. ஜெர்மனியின் கெம்னிட்ஸ் நகரில் நடைபெற்ற உலகப் புகழ்பெற்ற Theater der Welt 2026 விழாவுக்கு அழைக்கப்பட்ட முதலாவது இலங்கை நாடகம் என்ற பெருமையை இந்த நாடகம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

நுவரெலியா மஸ்கெலியா பிரவுன்லோ தோட்டப் பகுதியில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு, 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு அடி உயர சிவலிங்கம், பீடத்துடன் கூடிய நந்தி என்பன சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் நேரடியாகக் கையளிக்கப்பட்டுள்ளன. (க-66)





இடைக்காடு மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில், 2008-2015ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்குப் பங்களிப்பு வழங்கிய, முன்னாள் அதிபர் அருந்தவநேசன், வடமாகாண ஆளுநரால் பொன்னாடை போர்த்தி, பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். (க-159)

பளை இந்திராபுரம் போள் முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தலும் சிறுவர் மாதிரிச் சந்தையும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றன. (ச-9)







# மூதூர்ப் படுகொலை; 20ஆவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஓக.6

திருகோணமலை மூதூரில் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட 17 மனிதநேயத் தொண்டு நிறுவனப் பணியாளர்களின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், படுகொலை செய்யப்பட்டவர்களின் ஒளிப்படங்களுக்கு முன்பாக ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட 17 தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கும், இன விடுதலைக்காகப் போராடிமடிந்த அனைத்து மாவீரர்களுக்கும், போரில் கொல்லப்பட்ட தமிழ்மக்களுக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது. மலரஞ்சலியைத் தொடர்ந்து, நினைவுரைகள் ஆற்றப்பட்டன. (க-66)

சாவகச்சேரி வாரிவனம் முத்துமாரி அம்பாள் ஆலயப் பெருந்திரு விழாவின் வேட்டைத்திரு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை இடம்பெற்றது. (க-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 04. கோவில் வீதி. இல.310 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் உரிமையாளர் த.பத்மநாதன் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை. சின்னத்தம்பி சிற்றம்பலம் நாகலிங்கமும் நாகலிங்கம் மகள் நேசலக்ஷ்மியும் நாகலிங்கம் மகள் பத்மாவதியும் மற்றும் நாகலிங்கம் மகள் கமலாவதி ஆகியோர் 03.05.1954 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.விசுவலிங்கம் முகதாவில் 2600ம் இலக்க அறுதி உறுதி மூலம் நல்லூர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பிஐயா பத்மநாதனுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம். நியூயோர்க். அமெரிக்காவில் வசிக்கும் தற்காலம் இல.310. கோவில் வீதி. நல்லூர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்மநாதன் ராகவன் 09.06.2025 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஸ்ரீதரன் அம்பிகா முகதாவில் 1331ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப் படுத்தல் உறுதி மூலம். தனது காலஞ்சென்ற தந்தையான தம்பிஐயா பத்மநாதன் மரணசாதனம் நிறைவேற்றாமலும் நிர்வாகத் தத்துவப்பத்திரம் எடுக்க வேண்டிய பெறுமதியிலும் குறைவான சொத்துக்களை விட்டு இறக்க. குறித்த ஆதனம் அவரின் இரண்டு பிள்ளைகளில் ஏற்கனவே சீதனம் வழங்கப்பட்ட எனது சகோதரியாகிய நரேந்திரன் பெண் சுதாமதியைத் தவிர்த்து என்னை பிதாவழி முதுசமாக வந்தடைந்தது என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப் பகுதி. நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை. நல்லூர் பிரதேச செயலகர் பிரிவு. யாழ்ப்பாணம் மாநகர சபை. கிராமசேவகர் பிரிவு J/106."சாணி வளவும் சாட்டையன் வளவும் அழககோன் முதலியார் வளவும்" நில.பர 06 குளி 6 1/2 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் T.சின்னத்துரையினால் 20.04.1954 திகதி யிட்டு 818ம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நிலஅளவைப் படத்தில் சுட்டப்பட்டதன் படி நில.பர 6 குளி 7 11/16. இதில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட பாகம் நில.பர மூன்றும் குளி மூன்றொடு முப்பத்தியிரண்டில் இருபத்தேழும் (நில.பர 3 குளி 3 27/32) வீடும் கிணறும் பயிர்வகைகளும். இதற்கு எல்லைகள்:

கிழக்கு :- வி.அரியகுட்டி பெண் விசாலாம்பாளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்.
வடக்கு :- மேற்குறித்த படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்டுள்ள S.S.நாகலிங்கத்தினதும் மறுபேர்களினதும் ஆதனம்.
மேற்கு :- வீதி.
தெற்கு :- தம்பிப்பிள்ளை பொன்னம்பலத்திற்கும் பெண் பவளரத்தினத்திற்குமுரிய ஆதனம். இதடங்களும் இதற்குச்சேர்ந்தவைகளும்.

தற்போது பத்மநாதன் ராகவன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமைகோரா விடத்து குறித்த ஆதனமானது பத்மநாதன் ராகவன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தரு கின்றேன்.

**மாநகர முதல்வர்,**
**யாழ்ப்பாணம் மாநகரசபை.**

(cr.47874) (N-1)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 04. நல்லூர் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள 53/3 எனும் வரி மதிப்பீட்டு இலக்க ஆதனம் ஆதனவரிப் பதிவேட்டில் தர்மசங்கரி பெண் கனகநாயகி என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம். தற்போது தமிழ்நாடு இந்தியாவில் வசிக்கும் விஜயசங்கரி தர்மசங்கரி தனது அற்றோனித் தத்துவக்காரரான இல.8/7. சிவன் தெற்கு ஒழுங்கை. திருநெல்வேலியைச் சேர்ந்த வீரசிங்கம் சகாதேவசங்கரி மூலம் தோன்றி 2013.04.06 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு V.T சிவலிங்கம் முகதாவில் 2893ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம். அச்சுவேலி தெற்கு அச்சுவேலியைச் சேர்ந்த தனது காலஞ்சென்ற தாயார் வீரசிங்கம் தர்மசங்கரி பெண் கனகநாயகிக்கு உரித்தாக இருந்தது என்றும் அவர் தனக்குரிய ஆதனங்களை தன்னை உட்பட இருந்தது தனது பல பிள்ளைகளுக்கு தானமாகப் பிரித்து வழங்கியிருந்தார் என்றும் குறித்த விபரங்கள் காணிப்பதிவகத்தில் முறையாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்றும். அவ்வகையில் மேற்படி ஆதனம் தனக்கு தானமாக வழங்கப்பட்ட தனக்குரித்தான ஆதனம் என்றும் குறிப்பிட்டு வெளிப்படுத்தல் உறுதியினை நிறைவேற்றியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாண மாநகர சபை. நல்லூர் பிரதேச செயலர் பிரிவு. கிராமசேவகர் பிரிவு J/108. நல்லூர் கோவில் பற்று நல்லூர் இறை "சேருவந்தான் வளவும். கொள்ளை வளவும். அரசகுலசூரியன் வளவும்" நில.பர.12 குளி 16.47/56. ஆனால் ஆட்சிப்படியும் அளந்து கண்ட படியும் நிலபர 13 குளி 3/16. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.N.V.சேயோன் அவர்களால் 23.08.1976ம் திகதி அளந்து வரையப்பட்ட 165ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 தொடக்கம் துண்டு 9 வரை சுட்டப்பட்டுள்ளதன் படி நிலப்பரப்பு 18 குழி 05 ஆகும். இது மீண்டும் நில அளவையாளர் S.சுப்பிரமணியம் அவர்களால் 18.12.2012ம் திகதி அளந்து வரையப்பட்ட 2276ம் இலக்க படத்தில் துண்டு 1 தொடக்கம் துண்டு 9 வரை சுட்டப்பட்டுள்ளதன் படி நிலப்பரப்பு 18 குழி 07.61. இதில் துண்டு 3 எனச் சுட்டிய நிலப்பரப்பு 3 குழி 7.97. இதன் எல்லைகள்:

கிழக்கு :-துண்டு 9 எனச்சுட்டப்பட்ட கிணறு.
வடக்கு :-கந்தையா சிவபாக்கியத்தின் ஆதனம்.
மேற்கு :-கனபதிப்பிள்ளையின் உரித்தாளர்களினதும். A.வினாசியும் பெண் சின்னக்குட்டியினதும். N.சின்னத்தம்பியும் பெண் சின்னப்பிள்ளையினதும் ஆதனங்கள்.
தெற்கு :- துண்டு 6 எனச் சுட்டப்பட்ட கனகசங்கரி தர்மசங்கரியின் ஆதனம். இதடங்கலும் இன்னும் துண்டு 7 என சுட்டப்பட்ட பாதையூடாக போக்குவரத்து உரித்தும்.

தற்போது இவ்வாதனத்தை விஜயசங்கரி தர்மசங்கரி என்பவர் தனது பெயரிற்கு எமது ஆதனப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமை யாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது விஜயசங்கரி தர்மசங்கரி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாநகர முதல்வர்,**
**யாழ்ப்பாணம் மாநகரசபை.**

(cr.47875) (N-1)

### மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம்

# அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தானம்

## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் - 2026



| | | |
|---|---|---|
| 1 ம் திருவிழா | 05.08.2026 | கொடியேற்றம் |
| 7 ம் திருவிழா | 11.08.2026 | வேட்டைத்திருவிழா |
| 8 ம் திருவிழா | 12.08.2026 | சப்பறத்திருவிழா |
| 9 ம் திருவிழா | 13.08.2026 | தேர்த்திருவிழா |
| 10 ம் திருவிழா | 14.08.2026 | தீர்த்தத்திருவிழா |
| | 18.08.2026 | வைரவர் சாந்தி |

அடியார்கள், பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்மனின் அருளைப் பெற்றுச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ஆலய தர்மகர்த்தா**
**நவரத்தினம் மனோன்மணி அம்மா**

ஆலயத்தில் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாழ்மீது ஏறிநின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் தேர்த்திருவிழா அன்று இடம்பெறும்.



ஓம் சக்தி பராசக்தி துர்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாவகச்சேரி வாரிவனம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய முதலாம் மகோற்சவத்தின் தேர்திருவிழா

தென்மராட்சி சாவகச்சேரி நகரிலுள்ள வாரிவனம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் முதலாம் ஆண்டு மகோற்சவம், 2026 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, பன்னிரண்டு நாட்கள் பக்தி பூர்வமாகவும் ஆன்மிக எழுச்சியுடனும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**இம்மகோற்சவத்தின் உச்ச நிகழ்வாக விளங்கும் பத்தாம் நாள் தேர் திருவிழா, நாளை 07.08.2026 (வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணிக்கு மிகுந்த சிறப்புடன் நடைபெறவுள்ளது.**





## முதலாம் மகோற்சவத்தின் தனிச்சிறப்பு

இம்முதலாம் ஆண்டு மகோற்சவத்தின் சிறப்பை மேலும் உயர்த்தும் வகையில், அம்பாளுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த புதிய சித்திரத் தேரில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் முதன்முறையாக எழுந்தருளி திருவீதி உலா வரவிருக்கிறார். அண்மையில் வெற்றிகரமாக வெள்ளோட்டம் கண்ட இத்திருத்தேர், இம்முறை முதன்முறையாக அம்பாளை சுமந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவிருப்பது இம்மகோற்சவத்தின் தனிச்சிறப்பாகும்.

## அம்பாளின் அருள்மகிமை

அற்புதங்கள் நிறைந்த தலமாகப் போற்றப்படும் சாவகச்சேரி வாரிவனம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், தனது அருளாலும் கருணையாலும் ஆயிரக்கணக்கான பக்தர்களின் நம்பிக்கைக்குரிய திருத்தலமாகத் திகழ்கிறது. அம்பாளின் அருள்மகிமையை உணர்ந்த பக்தர்கள் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்து வழிபட்டு அருளாசி பெற்று வருகின்றனர்.


## அடியவர்களுக்கு அன்பான அழைப்பு

எனவே, அனைத்து அடியவர்களும் தேர் திருவிழா நாளன்று காலை ஆலயத்திற்கு வருகை தந்து, அம்பாளின் திருத்தேரை வடம் பிடித்து இழுத்து, இந்த தெய்வீகப் பெருவிழாவில் கலந்து கொண்டு அம்பாளின் பேரருளைப் பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

தேர் திருவிழாவை முன்னிட்டு
மாலை 7.00 மணி முதல்

## சிறப்பு இன்னிசை நிகழ்ச்சி

இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல கிராமிய இசைப் பாடகர்களான ராஜலட்சுமி – செந்தில் கணேஷ் தம்பதியினர் கலந்து கொண்டு, பழைய, புதிய மற்றும் இடைக்கால இனிய பாடல்களின் சங்கமமாக அமைந்த மனம் கவரும் இசை விருந்தை வழங்கவுள்ளனர். பக்திப் பாடல்கள், கிராமிய இசைப் பாடல்கள் மற்றும் அனைவரும் ரசிக்கும் இனிய பாடல்களால் இந்நிகழ்ச்சி வருகை தரும் பக்தர்களுக்கு மறக்க முடியாத இசை அனுபவத்தை வழங்கும்.


ராஜலட்சுமி – செந்தில் கணேஷ்
பிரபல கிராமிய இசைப் பாடகர்கள்

தேர் திருவிழாவிலும், மாலை நடைபெறும் இசை நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு ஆன்மிகமும் கலையும் நிறைந்த இவ்விழாவை சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்,
என்றும் இறைப்பணியில்,

**சாவகச்சேரி வாரிவனம்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்
பரிபாலன சபை மற்றும் உபயகாரர்கள்.**

**அனைவரும் வருவீர்! அம்மன் அருளால் வாழ்வில் வளம் பெருகட்டும்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 500 இனை...


செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 500 இனை நெருங்குகின்றது.

செம்மணிப் புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 44ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போது 8 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டதுடன், 8 என்புத்,தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 491 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டதுடன் 489 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## தொடர்கிறது...

நாள்களாக அசாதாரண காலநிலை நிலவி வருகின்றது. இதனால் வெள்ளப்பேரிடரும், மண்சரிவும் தொடர்ச்;சியாக ஏற்படுகின்றது. இந்தப் பேரிடர்கள் காரணமாகவே இதுவரை 4 ஆயிரத்து 151 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 345 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 682 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 504 பேர் 43 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களால் இதுவரையில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்துள்ளனர். மேலும், ஒரு வீடு முழுமையாகவும், 581 வீடுகள் பகுதியள விலும் சேதமடைந்துள்ளன. (அ-ம)




## திருகோணமலை எண்ணெய்த் தாங்கி வளாகத்துக்கு புதிய குழாய் கட்டமைப்பு

திருகோணமலை, ஓக.6

திருகோணமலை எண்ணெய்த் தாங்கி வளாகத்தையும் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் கடலோர மிதவைப் பாயையும் இணைக்கும் வகையில் புதிய குழாய்ப்பாதை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பங்குதாரர்களுக்கு இடையே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.துறைமுகங்கள், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் எரிசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக தலைமையில் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.இந்தப் புதிய குழாய்ப்பாதை அமைப்பதன் மூலம், துறைமுகத்துக்கு வரும் பெரிய கப்பல்களில் இருந்து நேரடியாக எண்ணெய்த் தாங்கிகளுக்கு எரிபொருள்களை இறக்கும் மற்றும் பரிமாற்றும் வசதி திறம்படக் கிடைக்கும். பிராந்திய அளவில் திருகோணமலையை ஒரு முக்கியமான எண்ணெய் சேமிப்பு மற்றும் விநியோக மையமாக மாற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்டு, பெரியளவில் எண்ணெயைச் சேமிக்க முதற்கட்டமாக 29 தாங்கிகளை தரம் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் புதிய குழாய்ப்பாதை மற்றும் நவீனமயமாக்கல் திட்டங்கள் மூலம் திருகோணமலைப் பிராந்தியத்தை தெற்காசியாவின் முதன்மை எண்ணெய் சேமிப்பு மையமாக மாற்றுவதே அரசாங்கத்தின் நீண்ட கால இலக்காகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தீவனத் தட்டுப்பாட்டால் எகிறும் முட்டை விலை


உற்பத்திச் செலவு கணிசமாக அதிகரித்துள்ளதன் காரணமாக, வரும் நாள்களில் சந்தையில் ஒரு முட்டையின் விலை 50 ரூபா வரை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான கோழிப்பண்ணை உரிமையாளர்கள் எச்சரித்துள்ளனர். இலங்கை கால்நடை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் எச். குணசேகர தெரிவிக்கையில், கால்நடைத் தீவனத் தயாரிப்புக்கான சோளத்தை இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டமையால், சந்தையில் சோளத் தட்டுப்பாடு நிலவுகின்றது. தீவன மூலப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாகக் கால் நடைத் தீவனத்தின் விலைகள் சுமார் 10 சதவீதத்தால் உயர்ந்துள்ளன. இலங்கையின் நாளாந்த முட்டைத் தேவை சுமார் 95 இலட்சமாக உள்ள போதிலும், தற்போது நாளாந்த முட்டை உற்பத்தி 70 இலட்சமாக வீழ்ச்சியடைந் துள்ளது. நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையும் முட்டை உற்பத்தி மேலும் குறைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. தீவனச் செலவு உயர்வு மற்றும் உற்பத்தி வீழ்ச்சி காரணமாக நுகர்வோர் வரும் நாள்களில் முட்டையை அதிக விலை கொடுத்து வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்- என்றார். (ச-இ)



சாவகச்சேரி கச்சாய் வீதி கோயிற்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம் நடராஜமுருகமூர்த்தி ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் ஆடி அமாவாசையன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-9)

## மரண அறிவித்தல்

பிறப்பு 13.10.1949



இறப்பு 04.08.2026

### திருமதி இராஜேஸ்வரி கந்தசாமி

பழவத்தை வியாபாரிமூலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி கந்தசாமி அவர்கள் நேற்று முன்தினம் (04.08.2026) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி கற்பகம் தம்பதியரின் அன்பு மகளும், கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், கணேசலிங்கம் அவர்களின் பாசமிகு தாயாரும், ஜெகதா அவர்களின் அன்பு மாமியாரும், யோகேஸ்வரி, தம்பித்துரை, மனோன்மணி, இந்திராணி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் விஜயராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மிதுஷா, லக்சி, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (07.08.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் 12.00 மணி வரை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மகன் கணேஷ் 16474006559
பெறாமகன் தீபன் (தம்பி) 0771509161
பெறாமகள் கலைவாணி 0779327805

(CS 32282)A

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01.12.1949



மறைவு 28.07.2024

### பழனிப்பிள்ளை சிவன்செயல் (ராசா)

(ராஜன் ஒளி ஒலி அமைப்பாளரும், மெக்கானிக்கள்)

அப்பா!...
ஆண்டுகள் இரண்டை கடக்கின்றது...
உங்கள் நினைவுகள் நெருங்கியே வருகின்றது
உங்கள் நினைவு நாட்கள் மட்டுமே நீனைவுட்டுகின்றது
நீங்கள் மரித்துப்போனதை!...
நாட்கள் தினம் நகர்ந்து போகும்
காணியாற்றில் நீங்கள் நட்ட மரம்கூட
ஒருநாள் பட்டுப்போகும்
எங்கள் இளமையும் முதுமையாய் வளர்ந்து போகும் ஆனால்.
உங்கள் நினைவுகள் மட்டும் எப்போதும் எங்களில்
இளமையாய் செழித்திருக்கும்.
என் நினைவில் நிற்கும் முதல் பதிவே
உங்களின் தோழ்மீது அமர்ந்து
காணியாற்று விளையை உற்றுநோக்கியது தான்
இப்போதும் அதே தோழ்களில் அமர்ந்தே
உலகை வலம் வருவதாய் உணர்கின்றோம்

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS 32284)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமலாக்கப்...

ஒப்புதலுடன் அவர்களின் மரபணுக் களைச் சேகரித்து, அவற்றைச் சர்வதேச மேற்பார்வையுடன் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் என்புத் தொகுதிகளை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்வதற்கும் நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளுக்கு இவை உதவியாக அமையும். ஆனால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவுகளின் மரபணுக்களைச் சேகரித்து அதனைப் பாதுகாக்கும் காப்பகம் எதுவும் இதுவரை உருவாக்கப்படாத நிலையே நாட்டில் காணப்படுகின்றது - என்றார். (அ-ம-26)

## செம்மணி மனிதப்...

செம்மணி மனிதப் புதைகுழியில் எதிர்காலத்தில் எத்தகைய நடவடிக்கைள் இடம்பெற வேண்டும் என்பது தொடர்பான நிர்வாகக் கலந்துரையாடல் செம்மணி அகழ்வாய்வுத் தளத்தில் திறந்த நீதிமன்ற அமர்வாக இடம்பெற்றது. இதன்போதே அகழ்வெல்லையை மேலும் விரிவாக்கம் செய்யவேண்டும் என்று சட்டத்தரணி சுகாஷ் சுட்டிக்காட்ட ஏனைய சட்டத்தரணிகளும் அத்தகைய கோரிக்கையை அழுத்தமாக முன்வைத்தனர்.

செம்மணி மனிதப்புதைகுழி அமைந்துள்ள அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அண்மையிலேயே எல்லைகள் இடப்பட்டன. நீண்ட காலமாக எவ்வித எல்லையும் இல்லாமல் திறந்த வெளியாகவே இந்த மயானம் காணப்பட்டது. எனவே, தற்போது அகழ்வுப் பணிகளை எல்லைச் சுவர்களுக்குள் மேற்கொள்வதில் அர்த்தம் இல்லை. மயானத்தின் எல்லைக்கு வெளியிலும் புதைகுழிகள் விரிவடையச் சாத்தியங்கள் உள்ளன. எனவே இது தொடர்பில் விரிவான ஆய்வுகள் இடம்பெற்று அகழ்வுப் பணிகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். இதற்குரிய ஸ்கான் பரிசோதனைகள் மற்றும் மண் மாதிரிப் பரிசோதனைகள் என்பவற்றை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என்றனர்.

இதன்போது, செம்மணிப் புதைகுழியில் எழுந்தமானமாகக் குழிகளைத் தோண்டும்போது என்புத் தொகுதிகள் தென்பட்டால், நான்காம்கட்ட அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக சட்டமருத்துவ அதிகாரியின் சார்பில் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஞா. ரணித்தா, விஸ். நிரஞ்சன் ஆகியோரும், காணாமல் போனோருக்கான அலுவலகம் சார்பில் அதன் ஆணையாளர் சட்டத்தரணி மீராக் ரஹீம் மற்றும் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், மற்றும் யாழ். மாவட்ட சட்டத்தரணிகளான குமரவடிவேல் குருபரன், விஸ்வலிங்கம் மணிவண்ணன், சுகாஷ் கனகரட்ணம், கையிலாசநாதன் சுபாகர், பெனிஸ்லஸ் துசாந், கஸ்தூரி அகலங்கன் ஆகியோரும் வழக்கில் முன்னிலையாகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## செம்மணி...

அழுத்தம் திருத்தமாக முன்வைத்துள்ளனர். செம்மணிப் புதைகுழி தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டுமாயின் இறப்பு நிகழ்ந்த காலப்பகுதியை அறிய வேண்டும். இறப்பு நிகழ்ந்த காலப்பகுதி தெரிவதற்கு கார்பன் பரிசோதனைக்குச் செல்ல வேண்டும். எனவே இந்த விடயத்தில் கார்பன் பரிசோதனை மிகப்பிரதானமானது என்றவாறாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளின் சமர்ப்பணம் அமைந்தது.

இதன்போது கார்பன் பரிசோதனையை விடவும் இடம்பெறவேண்டிய அவசியமான நடவடிக்கைகள் தொடர்பில் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினார்கள். செம்மணிப் புதைகுழியில் இருந்து பெறப்பட்ட சான்றுப் பொருள்களின் காலப்பகுதி கண்டறியப்பட வேண்டும். அதன் அடிப்படையில் குற்றச்செயல்கள் தொடர்பில் ஊகிக்க முடியும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். இதன்போது கார்பன் பரிசோதனைக்கு மாதிரிகளைத் தெரிவுசெய்யும்போது அந்தத் தெரிவு முறை வெளிப்படையாக இடம்பெற வேண்டும் என்று சட்டத்தரணி சட்டத்தரணி குருபரன் சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

அத்துடன், அகழ்ந்து எடுக்கப்படும் என்புத்தொகுதிகள் சிலவற்றைத் தவிர பெரும்பாலானவற்றில் துப்பாக்கிச் சன்னம் துளைத்தது போன்ற துளைகளோ, படுகொலை இடம்பெற்றது போன்ற சான்றுகளோ இல்லை என்றும் நீதிமன்றத்தில்; பிரஸ்தாபிக்கப்பட்டது. இதையடுத்து கார்பன் பரிசோதனை தொடர்பில் ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இடம்பெறும் வழக்கில் இறுதித் தீர்மானம் எடுப்பது என்று இணக்கம் காணப்பட்டது. (அ-ம-26)

## சிலை...

அமைக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியற் கைதிகளான குட்டிமணி மற்றும் தங்கத்துரைக்கு கடந்த 25ஆம் திகதியளவில் சிலைகள் திறப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்றன. இந்தப் பணிகளை ஒருங்கிணைத்து வந்த வல்வெட்டிதுறை நகரசபையின் முன்னாள் உபதவிசாளர் சதீஸ் கடந்த 22 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையான நிலையில், அவரைப் பிணையில் விடுவித்த மன்று சிலைகளை அமைப்பதற்கு தடை விதித்து உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தவேளையில் தடை நீடிக்கப்பட்டதுடன், புலனாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வழக்கு நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. இதையடுத்து வழக்கு நேற்று மீள அழைக்கப்பட்ட நிலையிலேயே, போதிய ஆதாரமின்றி இதற்குமேல் தடைகளைத் தொடர முடியாது என்ற அடிப்படையில் குட்டிமணி மற்றும் தங்கத்துரைக்கு சிலைகள் அமைக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. (அ-ம-80-26)

## அகிலவிராஜ ஒக்கு...

ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராகப் பதவி வகித்தபோது ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அலுவலகத்துக்கு நான்கு ஊழியர்களை நியமித்து அவர்களைத் தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு அகிலவிராஜ் காரியவசத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்த அவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டிருந்தார். இதையடுத்தே நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம)

## ஓய்வு வயது...

நீதிபதிகளின் ஓய்வுவயதை நீடிக்கும் முடிவிலிருந்து அரசாங்கம் பின்வாங்காவிடில் நிச்சயம் இளைஞர் புரட்சி வெடிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான வஜீர அபேவர்தன இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிபதிகளின் ஓய்வுவயதை நீடிப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்த எதிர்ப்பை மீறி நீதிபதிகளின் ஓய்வுவயது நீடிக்கப்படுமானால் நாட்டில் குழப்பங்கள் ஏற்படும். நிச்சயம் இளைஞர் கிளர்ச்சிக்கே இது வழிவகுக்கும். ஏனெனில் ஓய்வு வயதை நீடிப்பது என்பது இளைஞர்களுக்கான வாய்ப்புக்களை பறித்தெடுக்கும் செயலாகும் - என்றார். (அ-ம)

## வீட்டிலிருந்தோரைத்...

முகத்தை மூடிக்கட்டிவாறு வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த நால்வரைக் கொண்ட குழுவே இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்டதாக வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து இந்தக் குற்றச்செயல் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-27)

## இனப்...

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி இரண்டு நாள்கள் பயணமாக நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளார். அவரை நேரடியாகச் சந்தித்த கஜேந்திரகுமார் எம்.பி. தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் மனுவொன்றை வழங்கியுள்ளார்.

அந்த மனுவில் மேலும் உள்ளதாவது:-

இன முரண்பாட்டுக்குத் தீர்வாக இலங்கை அரசு தற்போது புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. அந்த அரசியலமைப்பில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் பிரதிபலிக்கப்படுவது இன்றியமையாததாகும். ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இந்தியாவின் தலையீட்டின் விளைவாக 1987ஆம் ஆண்டில் இந்திய-இலங்கை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. அந்த உடன்படிக்கையில் தமிழர்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த மக்கள் என அங்கீகரிக்கப்பட்டதுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த ஒரே நிர்வாக அலகாக இருந்து சுயாட்சியை அனுபவிக்க வேண்டும் என்ற கொள்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆயினும், அந்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதாகக் கூறி இலங்கை அரசு அரசியலமைப்பில் 13ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்தி ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கட்டமைப்பிற்குள் மாகாணசபை முறையை நிறுவியது. ஒற்றையாட்சி அரசில், தேசிய அரசாங்கமே அனைத்து அரசாங்க மட்டங்களுக்கும் மேலாக உயர்ந்த அதிகாரத்தைக் கொண்டுள்ளது. ஒற்றையாட்சி அரசின் அடிப்படை அம்சம் இறையாண்மையைப் பிரிக்க முடியாது என்பதாகும்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் இறையாண்மை முழுமையாக மத்திய அரசிடமே நிலைத்திருக்கிறது. இதுவே கடந்த 38 ஆண்டுகளாக ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் உருவாக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தமும் மாகாணசபை முறையும் ஈழத்தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதில் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்தமைக்கு அடிப்படைக் காரணமாகும். தமிழர் உரிமைகளுக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருமித்த நிலைப்பாடும், தமிழ்த்தேசிய அரசியல் வெளியில் இயங்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் நிலைப்பாடும் இதுவே. 2009ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்மக்கள் இந்த நிலைப்பாட்டை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தி வந்துள்ளனர்.

இந்தநிலையில் தற்போது ஆட்சியில் உள்ள அரசு 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பதவியில் இருந்த அரசால் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்புவரைவை அதாவது 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பை இறுதிப்படுத்தி நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசின் மூத்த தலைவர்கள் பல சந்தர்ப்பங்களில் இதனை வெளிப்படையாக மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த முன்மொழியப்பட்ட 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பு ஏற்கனவே தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தை விடவும் பலவீனமானதாகும். எனவே, இந்திய அரசு இலங்கை அரசின் மீது அழுத்தம் செலுத்தி முன்மொழியப்பட்ட 'ஏக்கிய ராஜ்ய' அரசியலமைப்பு இயற்றப்படுவதைத் தடுக்கவும், இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையை ஒழிக்கவும், தமிழ்த்தேசத்தை அங்கீகரித்து அதன் தனித்துவமான இறையாண்மையை அடிப்படையாகக் கொண்ட கூட்டாட்சி அரசியலமைப்பை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## சி.ஐ.டி.யின்...

கைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று சட்டத்தரணிகள் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளான ஞா. ரணித்தா, விஸ். நிரஞ்சன் ஆகியோரே இந்த விடயம் தொடர்பில் தமது சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

மண் மாதிரி பரிசோதனை அறிக்கை, இந்து கற்கைகள் பீடத்திடமிருந்து பெற வேண்டிய இரண்டு அறிக்கைகள், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் அறிக்கை, சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கைகள், இரண்டாம்கட்ட அகழ்வின்போது மக்களின் பார்வைக்குக் காண்பிக்கப்பட்ட சான்றுப்பொருள்கள் தொடர்பான அறிக்கை உள்ளிட்ட அறிக்கைகளை நீதிமன்றத்தில் முன்வைக்குமாறே அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அத்துடன், நீதிமன்ற கட்டுக்காவலில் உள்ள சான்றுப் பொருள்கள், என்புத் தொகுதிகள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பாடசாலை மாணவர்களுக்கு கண் பரிசோதனை முகாம்

கிளிநொச்சி வடக்கு வலய கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில், பாடசாலை மாணவர்களுக்கான கண் பரிசோதனை முகாம், முரசு மோட்டை முருகானந்தா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. யாழ். போதனா மருத்துவமனை கண் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் மலரவன் தலைமையில் நடைபெற்ற பரிசோதனை முகாமில், பளைக் கோட்டத்தைச் சேர்ந்த 150 மாணவர்கள் பங்குபற்றினர். இதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை மாவட்டச் செயலகம், வலயக்கல்வி அலுவலகம் மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து மேற்கொண்டன. (க-9)

வேலைலக்கு ஆட்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் கடைக்கு விற்பனையாளர் ஒருவர் தேவை.
ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு :- 076 945 0428

# குடும்பப் பொருளாதார நிலைமையே அஸ்வெசுமவில் இனி முன்னுரிமை

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய முறைமை, குடும்பங்களின் சமூக பொருளாதாரப் பாதிப்பு நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டே மதிப்பீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் விஜேசிறி பஸ்நாயக்க தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இதுதொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. தற்போதைய தெரிவு நடைமுறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில், புதிய தெரிவுமுறையில் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நாள்பட்ட நோயாளிகளின் இருப்பு, குடும்பத்தின் வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் நிலுவையிலுள்ள கடன்பாடுகள், இருப்பிட வசதி மற்றும் அடிப்படைச் சேவைகளுக்கான வாய்ப்புகள் கருத்திற்கொள்ளப் படவுள்ளன. ஏற்கனவே உள்ள அளவுகோல்களை மறுபரிசீலனை செய்ய நாடாளுமன்றக்குழு அதிகாரிகளுக்கு வழங்கிய அறிவுறுத்தலின்படி, நிபுணர் குழுவினால் இந்தப் புதிய முறைமை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. உண்மையான ஏழை மற்றும் நலிவடைந்த குடும்பங்கள் விடுபடாமல், தகுதியான அனைவருக்கும் அஸ்வெசும நலன்புரி உதவிகள் சரியாகச் சென்று சேர்வதை உறுதி செய்வதே இந்தப் புதிய மாற்றத்தின் முதன்மை நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

வேலையாள் தேவை
A9 வீதி, புத்தூர் சந்தியில் இயங்கிவரும் N.S.Nimal Welding (மின் ஒட்டு) நிறுவனத்திற்கு வேலை தெரிந்த வேலையாட்கள் தேவை.
Nimal : +44 743 889 2173
Thipan : +94 773 456 552

வீடு வாடகைக்குத் தேவை
யாழ்நகர் அல்லது அதனை அண்டிய பகுதிகளில் அலுவலகம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொலைபேசி
077 7111 999

காணி விற்பனைக்கு
மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி (வன்னியசிங்கம்) வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :- 077 960 7848

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஓக. 6

புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு நடத்தும், அரசு உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் போட்டித் தொடருக்கான குறுநாடகம் மற்றும் குறுந்திரைப்படப் பயிற்சிப்பட்டறை அடுத்த மாதம் நடைபெறும். இதில் குறுந்திரைப்படப் பயிற்சிப் பட்டறை எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதியும், குறுநாடகப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6,7ஆம் திகதிகளிலும் சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறும். இந்தப் பயிற்சிப் பட்டறையில் இணைந்து கொள்ள விரும்புவோர் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர், 011 286 1325 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும். (க)

# கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 6

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா முன்பள்ளி நடத்தும் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு, முன்பள்ளி வளாகத்தில் நடைபெறும். முகாமைத்துவக்குழுத் தலைவர் ந. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக ஈவினை கற்பக விநாயகர் ஆலயத் தலைவர் ந. ராஜ்குமார் கலந்து கொள்வார். (க)

# அலங்காரத் திருவிழா

சாவகச்சேரி, ஓக. 6

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் கோவில் அமிர்தபாஷிணி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று 108 சங்குமுழுக்குடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் திருவிழாக்காலத்தில், எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூரத் தினத்தன்று 1008 சங்கு முழுக்கு இடம்பெற்று திருவிழா நிறைவடையும். (க-ள-9)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
10 . 09 . 1946



ஆண்டவன் அடியில்
03 . 08 . 2026

### திருமதி கெங்காதரன் கனகம்மா

யாழ். நெடுந்தீவு கிழக்கு 14ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல. 50/4, சங்கிலியன் வீதி, நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதரன் கனகம்மா அவர்கள் 03.08.2026 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், அமரர் கெங்காதரன் (வெளிக்கள மேற்பார்வையாளர்) அவர்களின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், மயூரன் (ANJ Bros), அமரர் சிவகாமி (மேனகா), பகீரதன் (கனடா) ஆகியோரின் பேரன்பு மிகு தாயாரும், ஜனனி, நீலவேணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, மகேஸ்வரி, மேகலாதேவி, யோகலாதேவி, புவனேந்திரன், விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிஷாளி, மயுரிக்கா, பைஷ்வி(கனடா), நிவாஷ்வி(கனடா) ஆகியோரின் ஆசை பேத்தியும், பசுபதி, அமரர் கனகலிங்கம், அமரர் லீலாவதி, அமரர் சிறிதரன், ரேவதி, மனோகரன், புலேந்திரன், கமலாவதி, புஸ்பவதி, அமரர் இராஜேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2026) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

தகவல்: குடும்பத்தினர்
077 049 8084

(CS 32281)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.